[1994 ஏப்ரல் 5

191- -

பொன்னேரி தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல்

*15999-திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாககளுக்கு விடையளிப்பாரா--

(அ) பொன்னேரி தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பொன்னேரி வட்டப் பகுதியில் விளையும் கரும்பு முழுவதும் கும்மிடிப்பூண்டி வட்டம், புதுவயல் கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு தேவை என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் பொன்னேரி தொகுதியில் மேலும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் விளைகின்ற அனைத்து கரும்புகளும், பக்கத்து தொகுதியில் கும்மிடிப்பூண்டியில் தொடங்கப்பட இருக்கின்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்பும், இங்கே உற்பத்தி செய்வதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியுள்ளார்கள். கும்மிடிப்பூண்டியில் நிறுவப்பட உள்ள இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை எப்போது தொடங்கப்படும், அதனுடைய உற்பத்தித் திறன் எவ்வளவு? இன்றையதினம் தொழில் துறையில் இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் கண்டிராத அளவில் மாபெரும் சாதனை செய்து கொண்டிருக்கிற நம்முடைய தங்கத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் டாக்டர் புரட்சித் தலைவி கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குப் பெயர் இடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி வட்டம், புதுவயல் என்ற கிராமத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, அரசு அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கரும்பு அபிவிருத்தி மற்றும் இதரப் பணிகளை மேற்கொள்ள கரும்பு

உதவியாளர்கள், கரும்பு அலுவலகம் மற்றும் பொது மேலாளர் ஆகியோர் இப்போது நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆலைக்குத் தேவையான நிலங்களை வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவைகள் எல்லாம் முடிந்த பிறகு இந்த ஆலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை தொடங்கப்பட்டவுடன் என்னுடைய பொன்னேரி தொகுதியைச் சார்ந்த ஆயிரக்கணக்கான வேலையில்லாத இளைஞர்களுக்கு இந்த ஆலையில் பணி செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலைக்குத் தேவையான ஆட்களைத் தேர்வு செய்வதற்கு, அந்த ஆலைக்கு நிலம் கொடுத்தவர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். மேலும் அந்தப் பகுதியிலே இருக்கிற வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

192--

தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் மறுவாழ்வு நிதி ஏற்படுத்துதல்

***16451-திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் மறுவாழ்வு நிதி ஒன்றை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) "டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் மறுவாழ்வு நிதி" என்ற பெயரில் மறுவாழ்வு நிதி ஒன்றினை அரசு ஏற்படுத்தி அதற்காக ரூபாய் ஒரு கோடி மானியமாக இந்த அரசு வழங்கியுள்ளது.